# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 01.08.2026**

**சி.சி.எண். 124/2024**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அ.சா.1 (கோமதி) மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் ஆஜராகி சத்தியபிரமாணத்தின் பேரில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரி எனது கணவர் என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும், எனக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் எங்களுக்கு திருமணம் நடைபெற்று சுமார் 20 வருடங்கள் இருக்கும். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. தற்போது நான் விவசாய வேலைக்கு செல்வேனா என்றால் எனக்கு மூச்சுதிணறல் பிரச்சனை உள்ளதால் ஒருவாரத்தில் சுமார் 2 நாட்களுக்கு விவசாய வேலைக்கு செல்வேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் காந்திநகர் 4ம் தெருவில் குடியிந்தேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது, சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 10-10.30 மணியளவில் எனது கணவர் என்னை தாக்கியதாக முதல்விசாரணையில் கூறியவாறு கூறினேனா என்றால் கூறியிருப்பேன். போலீசார் விசாரணையின்போது எனது கணவருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக கூறினேனா என்றால் கூறினேன். மேற்கண்ட தொடர்புடைய பெண்ணின் தூண்டுதலின்பேரில் எனது கணவர் எனது வலது புஜத்தை தாக்கினார் என்று போலீசார் விசாரணையிலும், மருத்துவரிடமும் கூறினேனா என்றால் கூறினேன். பொதுவாக விவசாயத்திற்கு கடப்பாறை, களைகொத்தி, மண்வெட்டி ஆகிய ஆயுதங்களை பயன்படுத்தப்படும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்திற்கு முன்பு நான் மேற்கண்ட ஆயுதங்களை பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தேனா என்றால் நான் விவசாயத்திற்கு மேற்கூறிய ஆயுதங்களை பயன்படுத்தவில்லை. நான் குடியிருந்த வீட்டிற்கு மேற்குப்பக்கம் செந்தில்முருகன் வாடகை வீடு உண்டு என்றால் சரிதான். நான் குடியிருந்த வீட்டிற்கு கீழ்பக்கம் சண்முகம் வாடகை

வீடு இருந்தது என்றால் சரிதான். செந்தில்முருகன் வாடகை வீட்டிற்கு மேற்குப்பக்கம் தென்வடலாக காந்திநகர் 3ம் தெருவிற்கு செல்லும் பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட பாதையை ஒட்டி பிளஸ்என்எல் போல் ஒன்று உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் பிஎஸ்என்எல் போல் எனது வீட்டிற்கு முன் கீழே விழுந்து கிடந்தது என்றால் சரியல்ல. பொதுவாக விவசாயம் செய்பவர்கள் விவசாயத்திற்கான கருவிகளை அவர்கள் வீட்டிற்கு முன்பு குவித்துப்போட்டிருப்பார்கள் என்றால் என் வீட்டில் அவ்வாறு போடுவது கிடையாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திற்கு முன்பு நான் எவ்வளவு நேரம் துணி துவைத்துக்கொண்டிருந்தேன் என்றால் சுமார் அரைமணிநேரமாக துணி துவைத்துக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த என் கணவர் என்னிடம் என்ன பேசினார் என்றால் அவர் எதுவும் பேசவில்லை. அந்த விபரத்தை நான் போலீசாரிடம் கூறினேனா என்றால் கூறினேன். ஆஜர் எதிரி இடதுபக்க இடுப்பில் கத்தியை வைத்திருந்தாரா அல்லது வலது பக்க இடுப்பில் கத்தியை வைத்திருந்தாரா என்றால் அவர் தனது இடது கையில் கத்தியை வைத்திருந்தார். இடது கையில் வைத்திருந்த கத்தியை கொண்டு ஆஜர் எதிரி எனது வலதுபக்க முதுகில் குத்தி கீழே கிழித்துவிட்டதாக நான் சொல்கிறேனா என்றால் அவ்வாறுதான் நான் சொல்கிறேன். போலீசார் விசாரணையில் மேற்கண்ட விவரத்தை நான் கூறினேனா என்றால் கூறினேன். உடலில் எந்த உறுப்புகள் எங்கெங்கு உள்ளன என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உடலில் நுரையீரல் எங்கு இருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மருத்துவர் நுரையீரலில் ரத்தக்கசிவு ஏற்பட்டதாக சொல்லியதன் பேரில் நான் கூறினேன். காந்திநகர் 4ம் தெருவில் நான் வசித்து வந்த சமயத்தில் அங்கிருந்த முத்துக்குட்டி என்ற நபரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அந்த இடத்தில் வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் பக்கத்து வீட்டில்

செந்திலும், அவரது மனைவியும் இருந்தாக்ள். மேற்கண்ட இருநபர்களும் அந்த சமயத்தில் அங்கு இருந்தது பற்றி நான் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறியிருப்பேன். எதிரி என்னை கத்தியால் குத்தியபிறகு நான் கீழே விழுந்துவிட்டேனா என்றால் இல்லை அங்கிருந்து பக்கத்து வீட்டிற்கு ஓடினேன். அவ்வாறு ஓடும்பேது எதிரி என்னை பார்த்து என்ன கூறினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி என்னை குத்தியதற்காக பயன்படுத்தியதாக சொல்லும் கத்தியை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் எதிரி அந்த கத்தியை கொண்டு சென்றுவிட்டார். அதனால் கொடுக்கவில்லை. என்னை குத்தியதற்காக எதிரி பயன்படுத்தியதாக தெரிவித்து கத்தி எதுவும் என்னிடம் போலீசார் காட்டினார்களா என்றால் இல்லை.

சம்பவம் நடந்த பிறகு என்னை போர்த்துவதற்காக பயன்படுத்தப்பட்ட ரத்தக்கறை படிந்த போர்வையை போலீசார் என்னிடம் காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள். சம்பவமானது வீட்டிற்குள் வைத்து நடைபெற்றதா என்றால் இல்லை. வீட்டிற்கு வெளியில் வாசலை ஒட்டி நடைபெற்றது. நானும், எதிரியும் கட்டிபுரண்டு சண்டை போட்டது பற்றி போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுத்தேன் என்றாலும், எதிரிக்கு எதிராக இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் வீட்டின் குளியலறையில் தகரத்தால் ஆன கதவு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தகரக்கதவில் நான் தடுமாறி கீழே விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**